## 1.11 கிராம ஊராட்சிகளைப் பார்வையிடும் அலுவலர்களை நியமித்தல் மற்றும் அவர்களது முக்கிய கடமைகள் மற்றும் பொறுப்புகள் நிர்ணயித்தல்

ஊரக வளர்ச்சி ( இ5) துறை

அரசாணை (நிலை) எண்.238 நாள் : 25.07.1997

படிக்க :

1. ஊரக வளர்ச்சித் துறையின் 1161 எண்ணும் 21.05.64 நாளும் இட்ட நிலை அரசாணை.
2. ஊரக வளர்ச்சித் துறையின் 653 எண்ணும் 13.08.87 நாளும் இட்ட நிலை அரசாணை.
3. ஊரக வளர்ச்சித் துறையின் 92 எண்ணும் 26.03.97 நாளும் இட்ட நிலை அரசாணை.
4. ஊரக வளர்ச்சித் துறையின் 93 எண்ணும் 26.03.97 நாளும் இட்ட நிலை அரசாணை.
5. ஊரக வளர்ச்சித் துறையின் 180 எண்ணும் 09.06.97 நாளும் இட்ட நிலை அரசாணை

**ஆணை**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 199–ன் படி, ஊராட்சிகளைப் பார்வையிடவும் அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், அலுவலர்களை அரசு நியமிக்க வேண்டும். ஊராட்சிகளின் ஆய்வாளராக (Inspector of Panchayat) மாவட்ட ஆட்சியர் நியமிக்கப்பட்டுள்ளார். கிராம ஊராட்சிகளுக்கு மானியங்கள் நேரடியாக வழங்கப்பட்டு, பணிகளை கிராம ஊராட்சிகள் நேரடியாக செயற்படுத்தி வருகின்ற சூழ்நிலையில், மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக, கிராம ஊராட்சிகளைப் பார்வையிடும் அலுவலர்களை, வட்டார அளவில் நியமிப்பது குறித்தும், அவர்கள் ஆற்ற வேண்டிய முக்கிய கடமைகள் குறித்தும், அரசு ஆய்வு செய்து, கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கின்றது.

2. படிக்கப்பட்டவை 5–ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில், வட்டார அளவில் கிராம ஊராட்சிகள் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவிலுள்ள கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரையும், ஊராட்சிகள் விரிவாக்க அலுவலரையும், கிராம ஊராட்சிகளைப் பார்வையிடும் அலுவலர்களாக (Inspection Officers) நியமித்து அரசு ஆணையிடுகிறது.

3. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் ,1994, பிரிவு 200 மற்றும் 201 மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் கிராம ஊராட்சிகளைப் பார்வையிடவும் அவைகளின் பணிகள், பதிவேடுகள், சொத்துக்களை பார்வையிடவும் தேவையான தகவல்களைப் பெறவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சட்டப்பிரிவுகள்படி பார்வையிடும் அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கு தேவையான விபரங்கள் பதிவேடுகள், ஆவணங்களை அளிக்க வேண்டியது கிராம ஊராட்சிகளின் கடமையாகும்.

4. கிராம ஊராட்சிகள் நிதிக் கணக்கை, ஊராட்சிகள் விரிவாக்க அலுவலர் தணிக்கை செய்து வந்த பொறுப்பு, படிக்கப்பட்டவை 3ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில், துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. இதைத் தவிர கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலருக்கும், ஊராட்சிகள் விரிவாக்க அலுவலருக்கும் அவ்வப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள அல்லது மாவட்ட ஆட்சியரோ, ஊரக வளர்ச்சி இயக்குநரோ, இனிமேல் நிர்ணயிக்கும் ஏனைய பொறுப்புகள் மற்றும் கடமைகளுடன், கீழ்க்கண்ட பணிகளுக்கு அவர்கள் முக்கியத்துவம் அளித்து செய்ய வேண்டுமென்று அரசு தற்போது ஆணையிடுகிறது.

அ. **கிராம ஊராட்சிகளைப் பார்வையிடல் –** (i) வட்டாரத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளையும், ஒவ்வொரு மாதமும் இரண்டு முறையாவது ஊராட்சிகள் விரிவாக்க அலுவலர் பார்வையிட வேண்டும். (இரு ஊராட்சிகள் விரிவாக்க அலுவலர் உள்ள வட்டாரத்தில், 50 விழுக்காடு கிராம ஊராட்சிகளை ஒருவருக்கும், 50 விழுக்காடு கிராம ஊராட்சிகளை மற்றவருக்கும், கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.)

(ii) கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர், ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் சென்று மாதம் ஒருமுறையாவது மேற்பார்வையிட வேண்டும்.

ஆ. **ஊராட்சிப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதை உறுதி செய்தல் –** ஊரக வளர்ச்சித் துறையின் 93 எண்ணும் 26.03.97 நாளும் இட்ட நிலை அரசாணையில், மாநில நிதிக்குழுவின் பரிந்துரைப்படி, ஊராட்சிகளுக்கு அளிக்கப்படும் நிதியிலிருந்து, ஊராட்சிப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு முதலிடம் அளிக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, மாதந்தோறும் தவறாமல் ஊதியம் வழங்கப்படுகின்றதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

**இ. பணிகளைப் பார்வையிடுதல் –** கிராம ஊராட்சிகளின் பராமரிப்பில் உள்ள குடிநீர் கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள், தெருவிளக்குகள், சாலைகள், நூலகங்கள் மற்றும் படிப்பறைகள் ஆகியவற்றையும் ஊராட்சியின் இதர உடமைகளையும் பார்வையிட்டு, அவை சரிவர பராமரிக்கப்படுகின்றனவா என்று உறுதி செய்ய வேண்டும். ஊராட்சிகள் மேற்கொண்டுள்ள மூலதனப் பணிகள் தேக்கமின்றி நடைபெறுகின்றனவா என்று பார்வையிடுவதுடன், முன்னேற்றத்தை கண்காணிக்க வேண்டும்.

**ஈ. பதிவேடுகளைப் பார்வையிடுதல் –** ஊரக வளர்ச்சித் துறையின் 92 எண்ணும் 26.03.97 நாளும் இட்ட நிலை அரசாணையில், கிராம ஊராட்சிகள் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவை யாவும் சரிவர பராமரிக்கப்படுகின்றனவா என்பதை பார்வையிட்டு உறுதி செய்ய வேண்டும்.

**உ. ஊராட்சி மன்ற கூட்டங்கள் மற்றும் தீர்மானங்கள் –:** ஊராட்சி மன்றக் கூட்டங்கள் குறிப்பிட்ட காலவரையறுக்குள் நடத்தப்பட்டுள்ளனவா, தீர்மானங்கள் பதியப்பட்டுள்ளனவா, என்பதைப் பார்வையிட்டு, தீர்மானங்களை ஆய்வு செய்து தேவையான அறிக்கையை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும்.

**ஊ. வருவாய் வசூல் மற்றும் செலவுகளைக் கண்காணித்தல் –** ஊராட்சிகள், விரிவாக்க அலுவலரும், கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரும் சேர்ந்து வாரத்தில் ஒருநாள் 25 விழுக்காடு ஊராட்சி மன்ற கணக்குகளை (ஊரக வளர்ச்சி துறையின் 92 எண்ணும் 26.03.97 நாளும் இட்ட நிலை அரசாணைப்படி பராமரிக்க வேண்டிய) மூன்று கணக்குகளுக்கும் உரிய பற்றுவரவு கைச்சாத்துகள் (Pass Books), பணக்குறிப்பேடுகள் (Cash Books), காசோலை ஏடுகள் (Cheque Books) வருவாய் வசூல் தொடர்பான இரசீதுகள், பதிவேடுகள் மற்றும் செலுத்துச் சீட்டுகள் (Challans) ஆகியவற்றை மையமாக உள்ள ஒரு ஊராட்சி அலுவலகத்திற்கு கொண்டு வரவைத்து –

i) மூன்று கணக்குகளையும் பார்வையிட வேண்டும். முறையற்ற அல்லது அனுமதிக்கப்படாத செலவுகளுக்கு தொகை பெறப்பட்டிருந்தால் விபரங்களை மாவட்ட ஆட்சியருக்கு உடனே தெரியப்படுத்த வேண்டும்.

ii) வசூல் செய்ய வேண்டிய வரிகள், கட்டணங்கள் போன்றவை வசூல் செய்யப்படுகின்றனவா என்று ஆய்வு செய்து வசூல் செய்த தொகைகள் ஊராட்சி நிதிக் கணக்கில் உடனுக்குடன் செலுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். செலுத்தப்படாத தொகை விபரங்களை மாவட்ட ஆட்சியருக்கு உடனே தெரியப்படுத்த வேண்டும்.

இப்படி நான்கு மையங்களிலாக அனைத்து ஊராட்சிகளின் கணக்குகளையும் மாதம் ஒருமுறை தவாறமல் பார்வையிட வேண்டும்.

**எ. நாள் குறிப்பு வைத்தல் –** ஊராட்சிகள் விரிவாக்க அலுவலர் பார்வையிடும் போதும் வட்டார வளர்ச்சி அலுவலர் மேற்பார்வையிடும் போதும், காணப்படும் குறைகளை, பதிவேடுகளில் குறிப்பதுடன், கையொப்பமிட்டு நாள், குறிப்பிட வேண்டும். குறைகள் களையப்படுவதற்கான அறிவுரைகள் வழங்கி, அதன்படி செயற்படுத்தப்பட்டுள்ளனவா என்று, அடுத்தமுறை பார்வையிடும்போது உறுதி செய்ய வேண்டும். ஊராட்சிகள் விரிவாக்க அலுவலர், நாள் குறிப்பு பராமரித்து வாரம் ஒருமுறை கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரின் ஆய்வுக்கு வைக்க வேண்டும்.

**ஏ. ஊராட்சி மன்றத்தலைவர் மற்றும் துணைத் தலைவருக்குப் பயிற்சி அளித்தல் –** வட்டாரத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சி மன்றத்தலைவர் மற்றும் துணைத் தலைவர்களுக்கு, ஊராட்சி நிர்வாக விதிமுறைகள், கணக்குகள் பராமரித்தல், ஊராட்சியின் சொத்துக்களை பராமரித்தல், திட்டங்களை செயற்படுத்துதல் போன்றவை குறித்து, ஊராட்சிகள் விரிவாக்க அலுவலரும் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரும் சேர்ந்து, ஆண்டுக்கு ஒருமுறை ஒருநாள் அல்லது இரண்டு நாட்களுக்கு வட்டார தலைமையிடத்தில் வைத்து பயிற்சி அளிக்க வேண்டும். முதல் பயிற்சி அடுத்த இரண்டு மாதங்களுக்குள் (31.10.97–க்கு முன்) அளிக்க வேண்டும்.

5. பொறுப்புகள் நிர்ணயித்தல் – தவறுகள் அல்லது முறைகேடுகள், பின்னர் தெரியவந்தால், அதற்கு தொடர்புடைய ஊராட்சிப் பணியாளர்களுடன், ஊராட்சிகள் விரிவாக்க அலுவலரும், கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரும் சேர்ந்து பொறுப்பாவார்கள்.

6. இந்த அரசாணையின் நகலை அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். நாராயண்**
அரசு செயலாளர்